# தமிழகச் சட்டப் பேரவைத் தேர்தல் - 2026
# சமயச்சார்பின்மை அரசியல் காப்போம்!

தமிழகம் சட்டப்பேரவைத் தேர்தலை எதிர்கொள்கிறது. கிறித்தவச் சமூகம் ஓர் அரசியல் கட்சி அல்ல. ஆனால் அரசியல் உரிமைகள் கொண்ட ஒரு சமூகம். கட்சிகள் மீது நமக்கு விமர்சனங்கள் உண்டு. எக்கட்சியின் மீதும் தனிநபர்கள் மீதும் நமக்கு வெறுப்பில்லை. அனைவரையும் மதிக்கிறோம். ஆனால் பரந்துபட்ட மக்களின் அடிப்படை உரிமைகளை அவதானித்து, கீழ்க்கண்ட சில கருத்துக்களைப் பகிர்ந்து கொள்கிறோம்.

இந்திய அரசியல் சாசனம் இந்நாட்டின் பன்முகத் தன்மையை ஏற்றுக்கொள்கிறது. அரசுக்கு மதமில்லை. அனைத்து மதங்களும், நம்பிக்கைகளும் அரசால் சமமாக நடத்தப்பட வேண்டும் என்பதே அதன் அடிப்படை. அதுவே சமயச்சார்பின்மை. அதனடிப்படையில் சமத்துவம், சமூகநீதி, சகோதரத்துவம், சுதந்திரம் போன்ற வாழ்வுரிமைகள் அமைகின்றன. “யாதும் ஊரே யாவரும் கேளீர்” என்ற மதிப்பீட்டிலும், “பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்” என்ற மரபிலும், தமிழர் அறம் வேர்கொண்டுள்ளது. இந்து - முஸ்லீம் - கிறித்தவரிடையே காலங்காலமாய் நேர்மறையான சகோதர உறவே தமிழகத்தில் நிலவுகிறது.

தமிழகத்தில் இடையில் வந்த வர்ணாசிரமத் தத்துவத்தால், ஏற்றத்தாழ்வுகள் மிகுந்தன. சாதிய உயர்வு-தாழ்வுகள், தீண்டாமை போன்ற தீமைகள் மலிந்தன. பெண்ணடிமைத்தனம் தலைவிரித்தாடியது. சதி, குழந்தைத் திருமணம், தேவதாசி முறை போன்ற கொடுமைகள் நிலவின. கோவில்களை மையப்படுத்திய, மதம் சார்ந்த நிலப் பிரபுத்துவம் தமிழகத்தில் நிலைகொண்டது.

வர்ணாசிரமச் சீரழிவுக்கு மாற்றாக, ஒரு சமத்துவச் சமுதாய அமைப்பைத் தமிழகம் முன்னிறுத்தியது. அடிப்படையில் வடக்கத்திய ஆரியவாதம், வர்ணாசிரம தர்மம், சமஸ்கிருத மேலாதிக்கம் இவற்றில் முரண்பட்டே, கடந்த இரு நூற்றாண்டுகளாய்த் தமிழக வாழ்வியல் சுழல்கிறது.

தமிழகம் கடந்து வந்த பாதையைக் கருத்தில் கொண்டே, 2026 தேர்தல் களத்தை நாம் அவதானிக்கக் கடமைப் பட்டுள்ளோம். இச்சட்டப்பேரவைத் தேர்தல் பல்முனைக் களமாகிறது. குறிப்பாக, நான்கு அணிகள் களத்தில் நிற்கின்றன. அவை ஒவ்வொன்றின் நிறை - குறைகளைக் மதிப்பிடுவது நம் கடமை.

## 1. அ.தி.மு.க. - பா.ச.க.-வின் தேசிய சனநாயகக் கூட்டணி

- மத்தியில் கடந்த 12 ஆண்டுகளாய் பா.ச.க.-வின் ஆட்சி நடைபெறுகிறது. விவசாயிகளுக்கு எதிரான சட்டங்கள், குடியுரிமைச் சட்டம் (CAA), தொழிலாளர் விரோதச் சட்டங்கள், வக்ஃபு வாரியச் சட்டம், UAPA, NIA, PLMA போன்ற பல கருப்புச் சட்டங்களை அது அமல்படுத்தி உள்ளது.

- பாரபட்சமான ஜி.எஸ்.டி. பங்கீடு, தேசியக் கல்விக் கொள்கை, இந்தித் திணிப்பு, ஆளுநரின் எதேச்சதிகாரம், கல்வித்துறைக்கு நிதி மறுப்பு இவ்வாறு மாநிலத்தின் உரிமைகளைப் பறித்து, பா.ச.க. அதிகாரக் குவிப்பில் ஈடுபடுகிறது.
- கருத்துச் சுதந்திரத்தை ஒடுக்கும் நடைமுறைகள் தொடர்கின்றன. பல அப்பாவிகள் சிறையில் வாடுகின்றனர். சிலர் சங்கப் பரிவாரங்களால் கொல்லப்பட்டுள்ளனர்.
- வந்தே மாதரம் பாடுவதில் தவறில்லை. ஆனால், இந்திய நிலப்பரப்பைத் துர்க்கையாகவும், இலட்சுமியாகவும், சரஸ்வதியாகவும் கருதி வணங்க வேண்டுமென்பது, இந்துக்களின் சமய நம்பிக்கையாக இருக்கலாம். ஆனால் அதைப் பிற மதத்தினர் மீது திணிக்க முடியாது. பா.ச.க. அரசு அதையே செய்ய முயல்கிறது.
- பா.ச.க. 100 நாள் வேலைத் திட்டத்திற்கு, மகாத்மா காந்தியின் பெயரை மாற்றி, இந்துக் கடவுளான இராமரின் பெயரை வைத்துள்ளது.
- கிறித்தவ வழிபாட்டுத் தலங்கள் நாடு முழுவதும் தாக்கப்பட்டுள்ளன. கிறிஸ்துமஸ் விழாவைக் கூட மக்கள் மகிழ்ச்சியாகக் கொண்டாட முடியாத சூழல் நாட்டில் நிலவுகிறது.
- பல கிறித்தவ/முஸ்லீம் அமைப்புகளுக்கு, உப்புச்சப்பற்ற காரணங்களால் வெளிநாட்டு நிதி உதவி பெறும் அனுமதி (FCRA) இரத்துச் செய்யப்பட்டுள்ளது. தற்போது அந்த அமைப்புகளின் சொத்துக்களைக் கைப்பற்ற பா.ச.க. புதிய சட்டம் இயற்றியுள்ளது. அதேவேளையில், சங்கப் பரிவார அமைப்புகள் பல தாராளமாக வெளிநாட்டு நிதி உதவி பெறுகின்றன.
- இவையனைத்தையும் தாண்டி, சமய அடிப்படையிலான ஒற்றை தேசம், ஒற்றைக் கலாச்சாரம், ஒற்றை மொழி என்ற இலக்கு நோக்கி, பா.ச.க. நாட்டை நகர்த்துகிறது. இதையொட்டி, பாடத் திட்டங்கள் மாற்றப்படுகின்றன. முகலாயர் ஆட்சி, ஆங்கிலேயர் ஆட்சி தொடர்பான அனைத்தும் இருட்டடிப்புச் செய்யப்படுகின்றன.
- இதே நிலை நீடித்தால், சமயச்சார்பற்ற இந்தியாவை, ‘இந்துத்துவா அரசு’ என பா.ச.க. அறிவிக்கும் நாட்கள் வெகு தொலைவில் இல்லை. அவ்வாறு நிகழ்ந்தால், இந்துக்கள் அல்லாதோர் இரண்டாந்தரக் குடிமக்களாய்க் கருதப்படுவர் என்பது அவர்தம் கோட்பாடு.

பா.ச.க.-வின் நடவடிக்கைகள் அனைத்தையும் அ.தி.மு.க. அனுமதிக்கிறது அல்லது அமைதி காக்கிறது. “பா.ச.க-வுடன் எப்போதும் கூட்டணி இல்லை” என்று கூறிய அ.தி.மு.க., தற்போது மீண்டும் அவர்களுடன் கரம் கோர்த்துள்ளது. மதுரை மாநாட்டில் தந்தை பெரியாரின் படத்தை மேடையிலிருந்தே அகற்றிய போதும், அ.தி.மு.க. எதிர்ப்புத் தெரிவிக்கவில்லை. திருப்பரங்குன்றம் சர்ச்சையிலும் RSS கருத்தையே அது

பிரதிபலித்தது. அதன் திராவிடக் கருத்தியல் முற்றிலும் நீர்த்துப்போயுள்ளது.

**2. தமிழக வெற்றிக் கழகம்**

நடிகர் ஜோசப் விஜய் தலைமையில் இக்கட்சி முதன் முறையாகத் தேர்தலில் களம் காண்கிறது. குறிப்பாக இளம் தலைமுறையினர், தி.மு.க., அ.தி.மு.க. இவற்றிற்கு ஒரு மாற்றத்தைத் தேடுகின்றனர். நடிகர் விஜய்தான் சரியான மாற்று எனக் கருதுகின்றனர். இக்கட்சி தி.மு.க.-வை ஆட்சியிலிருந்து அகற்றுவதை மட்டுமே தன் ஒற்றை இலக்காகக் கொண்டுள்ளது. பா.ச.க.-வைத் தன் கருத்தியல் எதிரியாகக் கூறினாலும், அதன் நகர்வுகளில் அதற்குரிய கருத்தியல் தொடர்ச்சியும் செயல்பாடும் இல்லை. ‘பாசிசத்தையும் பாயாசத்தையும்’ ஒன்றாகப் பாவிக்கும் குழம்பிய அரசியலை அது அவதானிக்கிறது.

கொள்கையை விடத் திரைக் கவர்ச்சியும், அரசியல் உரையாடலை விடத் தனிமனித உணர்ச்சிகளுமே அக்கட்சியில் மேலோங்கியுள்ளன. அறிஞர் அண்ணா சொன்ன கடமை, கண்ணியம், கட்டுப்பாடு போன்ற அரசியல் கோட்பாடுகளை அக்கட்சித் தொண்டர்கள் பின்பற்றுவதாய்ப் படவில்லை.

குறிப்பாகக் கிறித்தவச் சிறுபான்மையினர் இக்கட்சிக்கு ஆதரவாகத் திரள்வர் என்ற மேலோட்டமான கருத்து, பொது வெளியில் நிலவுகிறது. ஆயினும் கிறித்தவர் என்பதால் மட்டும் கிறித்தவர்கள் எப்போதும் வாக்களிப்பதில்லை. வரையறுக்கப்பட்ட கோட்பாடு மற்றும் சமயச்சார்பின்மை இவற்றை அவதானித்தே கிறித்தவர்கள் எப்போதும் வாக்களிக்கின்றனர். அவ்வகையில் த.வெ.க.-வின் அரசியல் பயணத்தில் இதுவரை கொள்கை மற்றும் செயல்பாட்டில் தெளிவில்லை. இது சனநாயகத்திற்கும் நாட்டிற்கும் நல்லதல்ல.

**3. நாம் தமிழர் கட்சி**

நாம் தமிழர் கட்சி 2016 முதல் கடந்த நான்கு தேர்தல்களில் தனியே களமாடி வருகிறது. தேர்தலில் ஆண்கள்-பெண்கள் இரு பாலாருக்கும் சம வாய்ப்பு வழங்குவதும், அதன் தமிழ்ப் பற்றும் போற்றத் தகுந்தவை. திராவிட அரசியலுக்கு மாற்றாக, தமிழ்த் தேசியத்தை இக்கட்சி முன்வைக்கிறது. தமிழ்த் தேசியத்திற்கு எதிராகப் பிற மொழிவழித் தேசிய இனங்களைக் கட்டமைக்கிறது. அதன் தலைவர் சிறந்த பேச்சாளர்.

நா.த.க. பேசும் தமிழ்த் தேசியம், *“முருகன் நம் முப்பாட்டன்”* எனக் கூறி, பெரும்பான்மை மதவாதத்தை அல்லது மற்றொரு ‘தமிழ் இந்துத்துவாவை’ முன்மொழிகிறது. சமயச்சார்பின்மை அரசியல் குறித்து அக்கட்சி பெரிதாகப் பேசுவதில்லை. இராமனைத் தேசிய நாயகனாக வர்ணிக்கும் ஆர்.எஸ்.எஸ். சித்தாந்தத்திற்கு இணையாக, முருகனைத் தமிழ்த் தேசிய நாயகனாக அது வரையறுக்கிறது.

எனவே, மதவழிச் சிறுபான்மையினருக்கும், மொழிவழிச் சிறுபான்மையினருக்கும், அவர்தம் கருத்தியல் ஏற்புடையதாக வாய்ப்பில்லை. தமிழ்ச் சமூகத்தைப் பிளவுபடுத்தும் சாதிப் பெயர்களை அல்லது அதன் பின்ஒட்டுக்களை, அதன் சமூகத் தாக்கங்களை இக்கட்சி இயல்பாக ஏற்கிறது. அவ்வகையில்,

சமயப் பெரும்பான்மைவாதம் மற்றும் சாதி, மத அடையாளங்கள் இக்கட்சியில் மேலோங்கி நிற்கின்றன.

### 4. தி.மு.க., காங்கிரஸ் தலைமையிலான சமயச்சார்பற்ற கூட்டணி

கடந்த 2004 முதல் 2014 வரை நாட்டை ஆண்ட காங்கிரஸ் கூட்டணி பல நல்ல திட்டங்களை நிறைவேற்றியது. நூறு நாள் வேலைத் திட்டம், இலவசக் கட்டாயக் கல்விச் சட்டம், தகவல் உரிமைச் சட்டம், சிறுபான்மைக் கல்வி நிறுவனச் சட்டம் ஆகியன முக்கியமானவை. விடுதலைச் சிறுத்தைகள், இடதுசாரிக் கட்சிகள் இவை எப்போதும் சமயச் சார்பின்மைக்குத் துணையாக உள்ளன. தேசிய அளவில் இந்தியா கூட்டணி, காங்கிரஸ் தலைமையில், சமயச்சார்பற்ற அரசியலை உயர்த்திப்பிடிக்கின்றது.

கடந்த ஐந்து ஆண்டுகளாய் தி.மு.க.-வின் ஆட்சி தமிழகத்தில் நடைபெறுகிறது. இதனைத் திராவிடக் கருத்தியலின் வழிப்பட்ட ஆட்சியென அரசே கூறுகிறது. குறிப்பிடத்தக்க சில திட்டங்களைத் தி.மு.க. நடைமுறைப் படுத்தியுள்ளது.

- பெண்களுக்குக் கட்டணமில்லாப் பயணம், மகளிர் உரிமைத் தொகை, மாணவர்களுக்கான புதுமைப் பெண், நான் முதல்வன் மற்றும் தமிழ்ப் புதல்வன் திட்டம், மக்களைத் தேடி மருத்துவத் திட்டம், முதியோருக்கான உதவித் திட்டம், தொடக்கப் பள்ளி மாணவர்களுக்கான காலை உணவுத் திட்டம் போன்றவை குறிப்பிடத்தக்கவை. இவ்வாறு மக்கள் நல அரசாக அது விளங்குகிறது.
- பசி-பிணி நீக்குதல், நிலப் பங்கீடு, உணவு தானிய விநியோகம், பள்ளிக் கல்வி, பெண் கல்வி, உயர் கல்வி, மருத்துவக் கட்டமைப்பு, சாலை வசதிகள், மின்னிணைப்புக்கள், தொழில் வளர்ச்சி, இவற்றிலும், மனிதவளக் குறியீட்டிலும் தமிழகம் முன்னோடியாய்த் திகழ்கின்றது.
- இந்திய அளவில் வேலைக்குச் செல்லும் பெண்களில் 1/3 பெண்கள் தமிழகத்தில்தான் உள்ளனர். தமிழகத்தில் உயர் கல்வி பயில்வோர் 47% என, இந்தியாவிலேயே முதல் இடத்தில் உள்ளது. தொழில் வளர்ச்சி இந்திய அளவில் 6.1%ஆக உள்ள நிலையில், தமிழகத்தில் 11.3%ஆக உள்ளது. தமிழகம் பல துறைகளில் முதலிடத்தில் உள்ளதாக ஒன்றிய அரசின் தரவுகளே சொல்கின்றன.
- கிறித்தவர்களுக்குப் பல மாவட்டங்களில் கல்லறைக்கான இடம் ஒதுக்கப்பட்டுள்ளது. பல பழைய தேவாலயங்கள் புதுப்பிக்கப்படுகின்றன.
- ஆயினும் தி.மு.க. அரசின் மீது நமக்கு குறைபாடுகள் இல்லாமல் இல்லை. மதுவிலக்கைப் பூரணமாக அமுல்படுத்துவதாய்ச் சொன்ன வாக்குறுதியை அரசு நிறைவேற்றவில்லை. சிறுபான்மைக் கல்வி நிறுவனங்கள் தொடர்பான பல கோரிக்கைகள் இன்னும் நிறைவேற்றப் படவில்லை.

இவை அனைத்தையும் தாண்டி, தி.மு.க.-வின் ஆட்சி, மதவாத அரசியலை எதிர்த்துக் களமாடுகிறது. சமயச் சார்பின்மை, சமூக நல்லிணக்கம், சமூகநீதி இவற்றிற்கு இந்த அரசு துணை நிற்கிறது. மொழி உரிமை, மாநில உரிமைகள், சனாதன எதிர்ப்பு இவற்றில் அரசு உறுதியாக உள்ளது. குறிப்பாக, சமய மற்றும் மொழிச் சிறுபான்மையினர் அச்சமின்றி வாழவும், நாட்டில் நடமாடவும், செயல்படவும் முடிகிறது.

**திராவிடக் கருத்தியலும் தமிழ் மண்ணும்**

திராவிடக் கருத்தியலைப் பெரியார் வழிமொழிவதற்கு முன்பே, இதனை முன்மொழிந்தவர்கள் கிறித்தவ அறிஞர்களே. தந்தை பெரியார் 1925-ஆம் ஆண்டு சுயமரியாதை இயக்கத்தைத் தொடங்கினார். அதுவே 1944-இல் திராவிடர் கழகமாக உருப்பெற்றது. அதற்கு முன்பே, 1816-இல் எல்லிஸ் என்பவர், "*சமஸ்கிருதத்திற்கு அப்பால் தமிழ்மொழி தனித்து இயங்கவல்லது*" என்று கண்டறிந்தார். 1856-இல் இராபர்ட் கால்டுவெல் '*திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம்*' என்ற ஆய்வு நூலை வெளியிட்டார். வள்ளலார், அய்யா வைகுண்டர், மனோன்மணியம் சுந்தரம்பிள்ளை, அயோத்திதாசப் பண்டிதர், மறைமலை அடிகள், இரட்டைமலை சீனிவாசன் போன்றோர் திராவிடக் கருத்தியலை அவரவர் தளத்தில் மேம்படுத்தினர். இனம், மொழி இவற்றையும் தாண்டி, சாதிய ஏற்றத்தாழ்வுகள், பெண்ணடிமைத்தனம், மூடநம்பிக்கைகள் இவற்றிற்கு எதிராகச் சுயமரியாதை, பகுத்தறிவு, சமத்துவம் இவற்றின் அடியொட்டிய சமூகநீதியே திராவிட அரசியலாய் வளர்ந்தது. இதன் தாக்கம் கத்தோலிக்கத் திருச்சபையிலும் எதிரொலித்தது. மேற்கத்திய கலாச்சாரத்திலிருந்து மாறுபட்டு, தமிழ்ப் பற்று, தமிழர் பழக்க வழக்கங்கள், கத்தோலிக்க சமய வழிபாட்டு முறைகள் பலவற்றில் மக்களின் பக்தியாக மலர்ந்தது.

அரசியல் கட்சிகள் இக்கருத்தியலுக்குச் செயல்வடிவம் தர முயன்றன. நீதிக் கட்சி, காங்கிரஸ், திராவிடக் கட்சிகள் அனைத்தும் இதில் அடங்கும். அன்றைய மாகாண அமைப்பும், நில வரையறையும், திராவிடச் சொல்லாடலுக்கு ஏதுவாய் அமைந்தன. அனைத்தையும் தாண்டி, வர்ணாசிரம ஒடுக்குமுறைகள், சனாதன மற்றும் சமஸ்கிருத மேலாதிக்கத்திற்கு, திராவிடக் கருத்தியல் இன்றுவரை சிம்ம சொப்பனமாய் விளங்குகிறது. தமிழக அரசியலை மேலும் செம்மைப்படுத்தவும், அறவழிப்படுத்தவும் முடியும். ஆனால் மதவாத அரசியல் அதற்கு மாற்றாக அமையாது. மதவெறி அரசியலுக்கு இம்மண்ணில் திராவிடக் கருத்தியலே மாற்றாக நிற்கிறது. இதன் விளைவாகத் தமிழகம் பல்லாற்றானும் வளர்ச்சி கண்டுள்ளது. அக்கருத்தியலை தி.மு.க. என்ற அரசியல் கட்சியோடு மட்டும் சுருக்கிவிட முடியாது. அனைத்துத் தளங்களிலும் அது தமிழகத்தில் விரவியுள்ளது.

வடக்கில் வேரூன்றிய மதவாதம் தமிழகத்தில் எளிதாக நுழைய முடியவில்லை. எப்பாடுபட்டாகிலும் திராவிடக் கருத்தியலை வீழ்த்துவதே மதவாத சக்திகளின் முதல் நோக்கமாக உள்ளது. அவ்வாறு நிகழ்ந்தால், இந்துத்துவாக் கருத்தியல் தமிழ் மண்ணை எளிதாக ஆக்கிரமிக்கும் ஆபத்து உள்ளது.

**நம் நிலைப்பாடு**

சமயச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி வெற்றிபெறக் கூடாது என்ற ஒற்றைப் புள்ளியில் மேற்சொன்ன நான்கு அணிகளில் மூன்று அணிகள் ஒன்றுபடுகின்றன. தி.மு.க.-வின் செயல்பாடுகளில் பல குறைபாடுகள் இருப்பினும், அதன் கருத்தியல் நிலைப்பாட்டில் தெளிவும், உறுதியும் உள்ளன. வெறும் கொள்கைத் தூய்மையால் மட்டும் மதவாதத்தை வீழ்த்த முடியாது. அதற்கு அரசியல் வலிமையும், அமைப்பு வலிமையும் தேவை. அதற்கான ஒரே அணியாக, சமயச் சார்பற்ற முற்போக்குக் கூட்டணியே திகழ்கிறது.

இக்கருத்தில் சிலர் உடன்படலாம் அல்லது முரண்படலாம். குடிமக்களின் தனிப்பட்ட உரிமையையும், முடிவையும் நாம் பெரிதும் மதிக்கிறோம். எவருடைய தனியுரிமையிலும் குறுக்கிடுவது நம் நோக்கமல்ல.

இந்நிலையில், இத்தேர்தலைத் தனித்த நிகழ்வாகப் பார்க்காமல், தமிழக சமூக-அரசியல் வரலாற்றுத் தொடர்ச்சியாகப் பார்க்க வேண்டியுள்ளது. பெரும்பான்மை மதவாதம் சார்ந்த கட்சிகளை அல்லது அணியை எதிர்கொள்ள, இந்திய அரசியல் சாசனத்தின் சமயச் சார்பின்மையையும், தமிழகத்தில் மாற்றத்திற்கு வித்திட்ட திராவிடக் கருத்தியலையும் நாம் உரைகல்லாகக் கொள்ளலாம். சிறுபான்மையினர் என்ற குறுகிய வட்டத்தில் அல்லாமல், இம்மண்ணின் மைந்தர்கள் என்ற அடிப்படையில் அரசியலைக் கணிக்கவும், சமயச்சார்பற்ற சக்திகளோடு தோழமையைக் கட்டமைக்கவும் நாம் கடமைப்பட்டுள்ளோம்.

- இத்தேர்தலைப் பொறுத்தவரை, யார் வெற்றி பெறுகிறார்கள் என்பதைவிட, மதவாத சக்திகள் தோற்க வேண்டும் என்பதில் நாம் தெளிவு பெற வேண்டும்.
- சிறு சிறு கட்சிகளுக்கு வாக்களித்து, வாக்கு வங்கியைச் சிதறடிப்பதன் மூலம், மதவாத சக்திகள் தமிழகத்தில் வளர இடமளித்துவிடக் கூடாது.
- கிறித்தவர் என்பதற்காக எவரையும் ஆதரிக்காமல், கட்சிகளின் கொள்கைகள், செயல்பாடுகள் இவற்றின் அடிப்படையில் நாம் முடிவெடுக்க வேண்டும்.

சனநாயகம், சமூகநீதி, சமத்துவம், சகோதரத்துவம், சமூக நல்லிணக்கம் போன்ற இயேசுவின் மற்றும் இந்திய அரசியல் சாசனத்தின் மதிப்பீடுகளை வளர்த்தெடுப்பதற்கும், சமயச் சார்பின்மை மற்றும் மதவழிச் சிறுபான்மையினரின் வாழ்வுரிமைகள், மதச் சுதந்திரம் இவற்றைக் காப்பதற்கும், மேற்கண்ட கருத்துகளை மனதில் கொண்டு, நாமனைவரும் சட்டப்பேரவைத் தேர்தலில் கவனத்துடன் கடமையாற்ற வேண்டும் என அன்புடன் வேண்டுகிறோம்.

**சீசருக்குரியவற்றைச் சீசருக்கும்,**
**கடவுளுக்குரியவற்றைக் கடவுளுக்கும் கொடுங்கள்.** லூக்.2: 25

**தமிழக ஆயர் பேரவை, தமிழ்நாடு.**

கிறித்தவர் வாழ்வுரிமை இயக்கம், தமிழ்நாடு.